ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 6 PW- 5

| | |
|---|---|
| Name | : விக்னேஷ் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : கணேசன் |
| Village | : நத்தம் கோவில்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of November 2025

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து பேன்ஸிஸ் ஸ்டோர் கடை நடத்திவருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். கடந்த 19.07.2024ம் தேதி பள்ளப்பட்டி விலக்கின் அருகில் அமைந்துள்ள எங்கள் கடையின் முன்புறமுள்ள மற்றும் அருகிலுள்ள இடங்களை பார்வையிட்டு அது குறித்த விபரங்களை கேட்டறிந்து படமாக வரைந்து அதில் தோட்டம் மற்றும் கட்டிடங்களை குறித்துக் கொண்டார்கள். பின்னர் என்னை விசாரணை செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன். (**பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும், என்னிடம் இடம் குறித்து கேட்ட விபரங்களை எழுதியதில் கையொப்பம் செய்தேன், தற்போது அதில் என்ன எழுதியிருந்தது என்று ஞாபகமில்லை. என் கடை பாலத்திற்கு கீழே உள்ளது என்றால் சரிதான். என் கடையின் அருகே வைத்து எழுதினார் என்றால் சரிதான். ஒரு போலீசார் வந்தார். அவர் பதவி தெரியாது. ஜூப்பில் வந்தாரா அல்லது இருசக்கர வாகனத்தில் வந்தாரா என்றால், சரியாக கவனிக்கவில்லை. எவ்வளவு நேரம் என் கடை அருகேயிருந்து படம் வரைந்தார் என்றால் அருகில் விசாரித்துவிட்டு வந்து என்னை கடைசியாக விசாரித்தார், நான் விபரங்கள் சொன்னேன். அருகில் உள்ள யார்,யார் விசாரித்தார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. பள்ளப்பட்டி பாலத்திற்கு கீழே விசாரித்துவிட்டு பிறகு என்னிடம் வந்தார், அதை வைத்து சொன்னேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பார்வை மகஜர் தயார் செய்த அன்றே என்னிடம் காண்பித்தார். அந்த வரைபடத்தில் உள்ள எனது கடை மற்றும் சுற்றியுள்ள இடங்கள் பற்றி மட்டும் தெரியும். போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள் என்றால் இல்லை. இது தவிர எனக்கு இந்த வழக்கில் எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. முதல் நாள் பாலத்தின் அருகே பிரச்சினை நடந்தது பற்றி வேறு யாரும் சொன்னார்களா என்றால் இல்லை. என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், பாலத்திற்கு அருகே என் கடை உள்ளதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.20 21:00:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 8 PW- 6

| | |
|---|---|
| Name | : கருப்பணன் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி) |
| Father's/Husband's Name | : ஆண்டி |
| Village | : தொண்டமான்பட்டி |
| Taluk | : மதுரை |
| District | : மதுரை |
| Age | : 31/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of November 2025

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து எலெக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.07.2024ம் தேதி மதுரை புதூர் அருகே நானும், என் நண்பர் ஆண்டிச்சாமி என்பவரும் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது நகையை திருடியதாக ஒரு நபரை பற்றி காவல் ஆய்வாளர் விசாரித்து கொண்டிருந்தார். அந்த நபர் பெயர் சேதுபதியாகும். அவரை என்னால் அடையாளம் காட்டமுடியும்.(எதிரி ஆஜரில்லை) தற்போது என்னிடம் காட்டப்படும புகைப்படத்திலுள்ள நபர் தான் நான் கூறிய சேதுபதியாவார். பின்னர் மதுரை புதூர் காளியம்மன் கோவில் தெருவிலுள்ள அவரது மாமனார் வீட்டில் பீரோவிலிருந்து தங்க செயின் எடுத்துக்கொடுத்தார். அதற்காகவும் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ( **அந்த**

**ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது.**(அந்த அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது, **(படிவம் 91ல் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. நான் எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வருகிறேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது எலக்ட்ரீசியன் ஆக வேலை பார்க்கிறேன் என்ற விபரத்தை சொன்னேன் என்றால் இல்லை. என்ன வேலை என்று சொல்லவில்லை. எனது வீடு சத்திரப்பட்டி அருகே உள்ள தொண்டமானில் உள்ளது. எதற்காக அங்கு சென்றேன் என்றால் எலக்ட்ரிக்கல் சாமான் வாங்குவதற்காக பெரியார் பஸ் நிலையம் சென்றேன். சத்திரப்பட்டியில் இருந்து பெரியார் பஸ் ஸ்டாண்ட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன். எனது வீட்டில் இருந்து ஊமச்சிகுளம் வழியாக பெரியார் நிலையம் செல்லலாம் என்றால் சரிதான். எலக்ட்ரிக் சாமான் வாங்க சென்றதாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. அழகர் நகருக்கும் – புதூருக்கும் இடையில் வைத்து விசாரித்தார்கள். இடம் குறித்து சரியாக ஞாபகம் இல்லை. இன்ஸ்பெக்டர் விசாரித்தார். போலீசாருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு, மூன்று போலீசார் இருந்தார்கள். காலையில் போலீசார் என்னை சிடி பைல் கொடுத்து படிக்க சொன்னார் என்றால் இல்லை. அதில் இருக்கும் எதிரியின் புகைப்படத்தை காண்பித்தார் என்றால் இல்லை. காலையில் போலீசார் என்னிடம் எதிரியின் புகைப்படத்தை காண்பித்தார் என்றாலும், அதை வைத்து தான் அடையாளம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் இருபது நிமிடம் போலீசார் உடன் இருந்தேன். கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது, தங்கச்செயினை கைப்பற்றியது தொடர்பாக எழுதியதாக சொன்னார்கள். அழகர் நகர் மெயின் ரோட்டிலேயே உள்ள ஒரு வீட்டில் பீரோவில் இருந்து செயினை எடுத்தார்கள். வீட்டிற்குள் நான் சென்றேனா என்றால் இல்லை. பீரோவில் இருந்து எடுத்ததாக போலீசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான், செயினை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன், அது அந்து இருந்தது. இருதய வடிவம் கொண்ட செயினாக இருந்தது. காலையில் போலீசார் செயினின் புகைப்படத்தை காண்பித்ததை வைத்து அடையாளம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். உடன் இருந்த நபர் பெயர் ஆண்டிச்சாமி அவரும் என்னுடன் வேலை பார்க்கிறார். மதுரையில் உள்ள ஒரு வீட்டில் வேலை செய்வதற்காக எலக்ட்ரிக்கல் சாமான் வாங்க சென்றேன். கடச்சனேந்தலில் உள்ள ஜாங்கீட் நகரிலுள்ள ஒரு வீட்டிற்காக எலக்ட்ரிக்கல் சாமான் வாங்க சென்றேன். அந்த இடத்தில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை, இரவு 9.30 மணி என்பதால் நாங்கள் தான் இருந்தோம். எலக்ட்ரிக்கல் சாமான்களை எடுத்து வைக்க சொல்லி, சொல்லிவிட்டு வந்து விட்டோம் அந்த பொருட்கள் மறுநாள் எங்களுக்கு வந்துவிடும்.

4. மதுரை சேதுபதி பள்ளிக்கூடத்திற்கு எதிராக உள்ள சாலையில் எஸ். ஆர். எலக்ட்ரிகலில் பொருட்கள் வாங்குவோம். சேதுபதி பள்ளிக்கூடத்திற்கு எதிரே சந்து இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் கடையானது சிக்னலுக்கு அருகே உள்ளது. எனது ஓனர் லோகநாதன் என்பவர் பெயரில் ஆர்டர் போட்டோம். இந்த விவரங்களை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புதூர் பக்கம் செல்லாமல் ஊமச்சிகுளம் வழியாகவே செல்வதற்கு வழி உள்ளது என்றால் சரிதான். நான் நத்தம் காவல் நிலைய போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும், நான் சொல்வது போல் சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும், என் முன்னிலையில் நகை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. என் முன்னிலையில் அத்தாட்சி கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. சம்மனில் உள்ள எனது கைபொப்பமும் படிவம் 91 இல் உள்ள கையொப்பமும் வேறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல இரண்டுமே என்னுடைய கையொப்பம் தான். வழக்கிற்காக ஒரே கையொப்பம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum Digitally signed by J.Aafreen Begum Date: 2025.11.20 21:00:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.116/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 116/2024 LW- 9 PW- 7

| | |
|---|---|
| Name | : ஆண்டிச்சாமி (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி சாட்சி) |
| Father's/Husband's Name | : திருமலைச்சாமி |
| Village | : கடவூர் |
| Taluk | : மதுரை |
| District | : மதுரை |
| Age | : 27/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of November 2025

( எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து எலெக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.07.2024ம் தேதி இரவு சுமார் 9.30, 9.45 மணியளவில் நானும், என் நண்பர் கருப்பணன் என்பவரும் புதூரிலிருந்து இருசக்கர வாகனத்தில் திரும்பி வரும்போது நத்தம் காவல் நிலைய காவல் ஆய்வாளரிடம் தற்போது என்னிடம் புகைப்படத்தில் காட்டப்படும் நபர் மதுரை புதூரில் உள்ள அவரது மாமனார் வீட்டிலிருந்து தங்கச்செயின் ஒன்றை எடுத்துக் கொடுத்தபோது நானும், எனது நண்பர் அ.சா.6ம் இருந்தோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள். அப்போது போலீசாரிடம் நாங்கள் 3 கையொப்பம் செய்து கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் 2வது சாட்சிக் கையொப்பம் என்னுடையது. (**ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர், படிவம்−91 ஆகியவற்றில் உள்ள 2வது சாட்சிக் கையொப்பம் அ.த.சா.ஆ.6 முதல்**

**அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. புதூரில் உள்ள எஸ்.ஆர்.நகரில் வேலைக்கு சென்று வந்தோம். வேலையை முடித்துவிட்டு திரும்பும் வழியில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது போலீசார் எங்களை அழைத்தார்கள். எஸ்.ஆர்.நகரில் நகையை திருடிய நபரின் மாமனார் வீட்டிற்கு வெளியே போலீசார் இருந்தார்கள், அதனால் அங்கு சில பேர் இருந்தார்கள். அந்தப் பையனின் பெயரை போலீசார் சொன்னார்கள், ஆனால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை, அந்த பையன் தான் நகையை எடுத்து போலீசார் இடம் கொடுத்தார். நத்தம் காவல் ஆய்வாளர் ஹார்ட்டின் மாடல் கொண்ட நகையை எங்களிடம் காண்பித்தார்.

3. சுற்றி நிறைய பேர் இருந்தார்கள் அவர்கள் யார் என்று தெரியாது. எதற்காக போலீசார் எங்களிடம் மட்டும் காண்பித்தார்கள் என்றால் நாங்கள் உள்ளே சென்று பார்த்துக் கொண்டிருந்தோம் காண்பித்தார்கள். நான் டீ குடித்த கடைக்கு அருகில் தான் மெயின் ரோட்டிலேயே அந்த வீடு இருந்தது. கையெழுத்தை அங்கு வைத்து தான் போட்டோம். இரண்டு, மூன்று போலீசார் இருந்தார்கள். இன்ஸ்பெக்டர் என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் அவர் சட்டையில் மூன்று ஸ்டார் இருந்தது. அவரைத் தவிர இரண்டு போலீசார் இருந்தார்கள். நாங்கள் ஒரு 15 நிமிடம் அங்கு இருந்தோம். எழுதி இருந்ததில் கையெழுத்து போட்டோம். என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா படித்து பார்த்தோம். நகையை எதிரியிடமிருந்து எடுத்தது தொடர்பாக எழுதப்பட்டிருந்தது. நான் மூன்று ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ள நிலையில் எந்தெந்த ஆவணங்களில் என்னென்ன எழுதி இருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. அதற்குப் பிறகு நாங்கள் 10.30 மணிக்கு வீட்டிற்கு

சென்று விட்டோம் என்றால் சரிதான். இதை தவிர வேறு எதையும் நாங்கள் போலீசாரிடம் சொன்னோமா என்றால் இல்லை.

4. நான் சொல்வது போல் வேலை முடித்துவிட்டு செல்லவில்லை என்றாலும், நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும்அதன் அடிப்படையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றாலும் நாங்கள் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றாலும் சரியல்ல. காலையில் போலீசார் சிடி பைலை கொடுத்து அதை படித்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.11.20 21:00:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்